# ஜம் ஜம் (பரிசுத்தமான நீர்)

## வரலாறும் அதன் முக்கியத்துவமும்

(Al Jumuah magazine: Some of the information in this article were extracted from the following website :http://shaijia.8m.net)

“எங்கள் இறைவனே! நிச்சயமாக நான் என் சந்ததியாரிலிருந்தும், சங்கையான உன் வீட்டின் (கஃபாவின்) அருகே, விவசாயமில்லாத (இப்)பள்ளத்தாக்கில், எங்கள் இறைவனே! - தொழுகையை அவர்கள் நிலை நிறுத்தாட்டுவதற்காகக் குடியேற்றியிருக்கின்றேன். எனவே மக்களில் ஒரு தொகையினரின் இதயங்களை அவர்கள்பால் சாய்ந்திடச்ந்தர் செய்வாயாக! இன்னும் அவர்கள் நன்றி செலுத்தும் பொருட்டு கனிவர்க்கங்களிலிருந்து அவர்களுக்கு நீ ஆகாரமும் அளிப்பாயாக!” (14:37)

“நிலத்தில் கிடைக்கும் அனைத்து நீரிலும் ஸம்ஸம் மிகவும் தூய்மையானது (புனிதமானது). அதில் ஒருவர் தனது பசிக்குரிய ஆகாரத்தையும், இன்னும் நோய்க்கான மருந்தையும் அதில் கண்டு கொள்ளலாம்”. (அத்தபரானீ)

### அறிமுகம்

இந்த உலகத்தில் வாழ்கின்ற அத்தனை உயிர்களையும் இறைவன் நீர் என்னும் மூலத்திலிருந்தே படைத்திருக்கின்றான். தண்ணீர் என்பது மனிதர்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதொன்றாகும். விவசாயம், கட்டுமானம், போக்குவரத்து மற்றும் குளிர்ச்சியை ஊட்டவும், வெப்பத்தை ஏற்படுத்தவும் பயன்படுகின்றது. ஆனால் எல்லா தண்ணீரும் ஒரே மாதிரியான குணம் கொண்டவையாகவும், முக்கியத்துவம் உடையதாகவும் இருக்கின்றதா? முஸ்லிம்கள் ஸம்ஸம் தண்ணீரைத் தனித்துவமானதாகவும், சிறப்பானதாகவும் கருதுகின்றார்கள். இந்த அற்புதமான நீரை முஸ்லிம் தாங்கள் விரும்பும் நேரத்திலெல்லாம் அருந்துவதற்கு பேராவல் கொள்கின்றவர்களாக இருக்கின்றார்கள். இன்னும் ஹஜ்ஜு க் காலங்களிலும், உம்ரா செய்யும் காலங்களிலெல்லாம் மக்காவிற்குப் பயணம் செய்கின்ற ஒருவர், இந்த ஸம்ஸம் தண்ணீரை மிகவும் பாக்கியமெனக் கருதி, அதன் எடையையும் கூட பொருட்படுத்தாமல் தங்களுடன் எடுத்து வருவதோடு, நாடு திரும்பியதும் தங்களது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அதனை பரிசாக வழங்குவதன் மூலம் சந்தோஷமடையக் கூடியவர்களாக இருக்கின்றார்கள்.

ஆகவே, புனிதமிக்க இந்த ஸம்ஸம் தண்ணீரில் என்ன தான் சிறப்பு இருக்கின்றது? என்றால், அதில் அனைத்தும் இருக்கின்றது.

அது மிகச் சிறப்பு வாய்ந்ததொன்று. வறண்ட பாலை வனத்தின் மத்தியில் உதித்த இந்த ஊற்றானது, கடந்த ஆயிரம் ஆண்டுகளாக வற்றாமல், அதனை அருந்தும் மக்களுக்குப் பயனுள்ள வகையில் சிறப்புத் தன்மைகளைப் பெற்றிருப்பதோடு, அது என்றைக்குமே வற்றாத நீரூற்றாக தொடர்ந்தும் ஒலித்தோடிக் கொண்டிருக்கின்றது. எனவே, இந்த நீர் மிகவும் சிறப்புத் தன்மை வாய்ந்ததாகும்.

இது ஐந்து அடி ஆழமுள்ள கிணறு, இதற்கு அருகே நீர் நிலைகளோ அல்லது நீராதாரம் மிக்க எந்த வழிகளுமோ இதற்குக் கிடையாது, தனித்துவமானது. இந்தக் கிணற்றிலிருந்து நீரானது தானாகவே எப்பொழுதும் பொங்கி எழுந்து வரக் கூடியதாகவும், தாகத்தோடு வரும் கோடிக்கணக்கான ஹாஜிகளுக்குத் தண்ணீர் புகட்டுவதோடு, மக்கள் தங்களது தேவைகளுக்காக பாட்டில்களில் தண்ணீரை நிரப்பிச் செல்வதோடு, தங்களது தாய்நாடுகளுக்குத் திரும்பக் கூடியவர்கள் தங்களுடன் இந்தத் தண்ணீரை எடுத்துச் செல்லக் கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பதோடு, இதில்

கால்சியம் மற்றும் மெக்னீஸியம் இருப்பதன் காரணமாக நோயைக் குணப்படுத்தக் கூடிய தன்மை உண்டு என்பதையும், இயற்கையாகவே இதில் புளுரைடு கலந்திருப்பதால் நோய்க்கிருமிகளைக் கொல்லக் கூடிய தன்மைகள் உண்டு என்றும் மருத்துவ மற்றும் அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

மித வெப்பமான காலத்தில் நீர் நிலைகளில் ஆல்கே என்ற பாசிகள் படியக் கூடியது இயற்கையானது, ஆனால் இந்த ஸம்ஸம் கிணற்றில் எந்தவித பாசிகளும் படிவதில்லை என்பது அற்புதமானதாகும். மேலும், உயிர்வேதியியல் காரணிகளின் கேடுகளில் இருந்தும் இது பாதுகாக்கப்பட்டதாக இருந்து கொண்டிருக்கின்றது.

அன்னை ஹாஜரா (அலை) அவர்கள், தனது புதல்வரான இஸ்மாயீல் (அலை) அவர்களுக்குப் பருகக் கொடுப்பதற்காக வேண்டி, பருகுவதற்கு தண்ணீர் கிடைக்குமா என்று பாலைப் பெருவெளியில் எந்தவித நம்பிக்கையும் அற்ற நிலையில் அலைந்து கொண்டிருந்த பொழுது, அல்லாஹ் தனது அருட்கொடையின் மூலமாக இந்த நீரூற்றை ஒலித்தோடச் செய்தான். அதனைத் தான் இந்த முஸ்லிம் சமுதாயம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அருந்திக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றது. எந்தக் காலத்திலும் இந்த நீரூற்று வற்றிப் போனதென்பது கிடையாது. முஸ்லிம்களுக்கு அருட்கொடையாக இறைவன் அளித்த இந்த அருட்கொடையைப் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் இனி வரும் பக்கங்களில் நாம் காண்போம்.

## பெருமைமிகு வரலாறு

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

அல்லாஹ் தனது மிகப் பெரும் கருணையை இஸ்மாயீல் (அலை) அவர்களது அன்னையான ஹாஜரா (அலை) அவர்கள் மீது பொழிவானாக..! (அன்னை ஹாஜரா (அலை) அவர்கள்) அந்த ஸம்ஸம் தண்ணீரை (ஊற்றை) அது எவ்வாறு இருந்ததோ அதன்படி, (அதில் தொட்டி போன்று எதனையும் கட்டாமல்), அதிலிருந்து நீரூற்றாக ஒலித்தோடும்படி விட்டு வைத்தார்கள். ஜு ர்கூம் என்ற அரபுக் கோத்திரத்தார் ஹாஜரா (அலை) அவர்களிடம் வந்து, நாங்கள் இங்கே உங்களுடன் தங்கிக் கொள்ளலாமா? என்று கேட்ட பொழுது, ஆம்..! (தங்கிக் கொள்ளலாம்), ஆனால் இந்த நீரூற்றின் மீது உங்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது, (என்றால் நீங்கள் தங்கிக் கொள்ளலாம்) என்றார்கள். அவர்களும் இதற்கு ஒப்புக் கொண்டார்கள். (புகாரீ)

இவ்வாறே உயிர்வாழ்வதற்கு எந்தவித ஆதாரமும் அற்ற அந்தப் பாலைப் பெருவெளியில் மனித நாகரீகம் குடியேறத் துவங்கியது எனலாம்.

ஜிப்ரீல் (அலை) அவர்கள், இந்த நீரூற்றைப் பூமியிலிருந்து வெளிப்படச் செய்ததன் காரணமாக, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் முப்பாட்டனரான இஸ்மாயீல் (அலை) அவர்களது உயிர் காப்பாற்றப்பட்டது. இப்றாஹீம் (அலை) அவர்களின் மனைவியான அன்னை ஹாஜரா (அலை) அவர்கள், இந்த நீரூற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தியதோடு, அங்கே கிணறு போன்ற அமைப்பையும் நிறுவினார்கள். இந்த நீரூற்றானது முஸ்லிம்களின் புனிதத் தளமான கஃபா விற்கும் சற்று அருகில் தான் அமைந்துள்ளது. இந்த நீரூற்று வெளிக்கிளம்பியதன் காரணமாகத் தான் ஜு ர்ஹு ம் கோத்திரத்தார் இந்த இடத்தில் தங்களது இருப்பிடத்தை அமைத்துக் கொள்ள விரும்பினார்கள். இவ்வாறு இவர்கள் இந்த இடத்தில் தங்கியதன் காரணமாக, இந்த பாலைப் பெருவெளியில் மனித நாகரீகம்

தலைத்தோங்குவதற்கான ஆரம்ப வரலாறு ஆரம்பமாகியது எனலாம். இதுவன்றி வேறு எந்த நீரூற்றும் இத்தனை சிறப்பம்சங்களைப் பெற்றதாகச் சரித்திரம் கிடையாது.

## ஸம்ஸம் நீரூற்றின் மறுபிறப்பு

காலங்கள் செல்லச் செல்ல மக்காவை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்த மக்களின், இறைநம்பிக்கை பலவீனப்பட்டு வந்தது. மக்காவின் முதன் முதல் குடியேற்றவாசிகளான ஜு ர்ஹு ம்கள் நேர்மையாகவும், நீதமாகவும் நடப்பதை விட்டு விட்டு, அடக்குமுறையாளர்களாக மாறிய பொழுது, அவர்களை மக்காவை விட்டும் வெளியேற்றும் நிலை ஏற்பட்டது. அவர்கள் ஸம்ஸம் நீரூற்றின் புனிதத்துவத்தைப் பற்றிச் சிறிதும் அக்கறை கொள்ளாத மக்களாக இருந்தார்கள், எனவே ஸம்ஸம் நீரூற்றானது தன்னை ஆக்கிரமித்த மக்களுக்கு தனது அருட்கொடைகளை வழங்க மறுத்து, நீரூற்றை பூமிக்குள் இழுத்துக் கொண்டது. அதன் பின்பு ஜம் ஜம் திறக்கப்படமாலேயே, மறக்கப்பட்டதாகவும் ஆகிப் போனது.

இவ்வாறாக பல தலைமுறைகள் வந்து போயின. எதுவரையெனில் அப்துல் முத்தலிப் (இறைத்தூதர்(ஸல்) அவர்களின் பாட்டனார்) அவர்களது தலைமுறை வரைக்கும் இவ்வாறிருந்தது. அதன் பின் அப்துல் முத்தலிப் அவர்கள் இந்த நீரூற்றை மீண்டும் தோண்டினார்கள். அப்துல் முத்தலிப் அவர்களும் இந்த நீரூற்றைப் பற்றி சரியான அக்கறை காட்டாதவர்களாகவே இருந்தார்கள். இறுதித்தூதுவர் வருவதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தவுடன், தொடர்ந்தேர்ச்சியாக நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகள், இந்த ஸம்ஸம் கிணறு மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, தனது புதுப்பொலிவைக் காண ஆரம்பித்தது.

தொடர்ச்சியாக மூன்று நாட்கள், மூடப்பட்ட நிலையில் கிடந்த கிணற்றைத் தோண்டுவது போலக் கனவு கண்டார்கள் அப்துல் முத்தலிப் அவர்கள். ஒவ்வொரு நாளின் பொழுதும், கிணற்றின் பெயரை மாற்றி மாற்றிக் கூறப்பட்ட நிலையில், அதன் இருப்பிடத்தைப் பற்றிக் காட்டப்படவில்லை. நான்காம் நாளின் பொழுது, ஸம்ஸம் கிணற்றின் பெயரும், அதன் இருப்பிடமும் தெளிவான முறையில் காட்டப்பட்டதன் பின், தனக்கு இடப்பட்ட பணியினை மறுநாள் காலையிலேயே ஆரம்பித்து விட்டார்கள்.

அன்றைக்கு மக்கா வாசிகளிடம் இருந்த கடுமையான இறைநிராகரிப்பின் காரணமாக, இந்த பாழ்பட்டுப் போன இடத்திலா தண்ணீரைத் தேடுகின்றீர்கள் என்று அப்துல் முத்தலிப் அவர்களை நோக்கி ஏளனமாகச் சிரித்தார்கள். இறுதியில் அப்துல் முத்தலிப் அவர்கள் அந்தப் புரதான கிணறானது, க..பாவிற்கும் மிகவும் அருகில் தான் உள்ளது என்பதைக் கண்டு கொண்டார்கள். கண்டுபிடிக்கப்பட்ட அந்தக் கிணற்றின் மீது மக்காவாசிகள் அனைவரும் தங்களுடையது எனச் சொந்தம் கொண்டாட ஆரம்பித்தார்கள். அப்துல் முத்தலிப் அவர்களோ, இத்தகைய எந்தக் கோரிக்கைக்கும் செவிகொடுக்க மறுத்ததோடு, அவர்களது அந்தக் கோரிக்கைகளைத் தள்ளுபடியும் செய்து விட்டார்.

மக்காவாசிகளும் மற்றும் அப்துல் முத்தலிபும் ஒரு நடுநிலையான தீர்ப்புக்கு வர முடியாததால், இரு குழுவினரும் தங்களுக்கிடையே மத்தியஸ்தராகச் செயல்படும் ஒரு நபரைச் சந்திக்க ஒப்புக் கொண்டார்கள். எனவே, ஒரு இறைபக்தியுள்ள ஒருவரைக் கொண்டு தங்களது வழக்கைத் தீர்த்துக் கொள்ளவும் ஒப்புக் கொண்டு, அந்த நபரை நாடிப் பயணமானார்கள்.

அவர்கள் ஒரு பாலைவனப் பகுதியைக் கடந்து செல்லும் பொழுது, அவர்கள் சென்ற வாகனங்கள் வைத்திருந்த அத்தனை நீரும் தீர்ந்து விட்டது. தங்களிடம் தண்ணீர் தீர்ந்து விட்டபடியால், இனி பயணத்தைத் தொடர முடியாது, எதற்காக அவர்கள் வெளிக் கிளம்பினார்களோ, அந்த நோக்கத்தை

அடைவதில் கூட இப்பொழுது பின்வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட அப்துல் முத்தலிப்புடன் பயணம் செய்த அத்தனை பேரும், தங்களது முடிவைக் கைவிடும் நிலைக்கு வந்தார்கள். இவ்வாறாக, அனைத்து வித நம்பிக்கைகளும் தகர்ந்து சரி திரும்பிப் போய் விடுவோம் என்று அவர்கள் முடிவு செய்கையில், அப்துல் முத்தலிப் தனது ஒட்டகத்தின் மீது வைத்திருந்த காலியான தண்ணீர்ப் பையிலிருந்த சிறு துளை வழியாகத் அற்புதமான முறையில் தண்ணீர் வழிந்தோட ஆரம்பித்தது. நடுப் பாலைவனத்தில் தாகத்தின் கொடுமையால், தங்களது வாழ்வு அண்மிக்க இருந்த வேளையில் அற்புதமான முறையில் அப்துல் முத்தலிபின் தோல் பையிலிருந்து தண்ணீர் வழிந்தோடிய இந்த சம்பவத்தைப் பார்த்த அந்த மக்கத்துவாசிகள், எந்தத் தண்ணீருக்கான பிரச்னையை தீர்த்துக் கொள்ள நாடி நாம் வெளிக்கிளம்பினோமோ, அந்தத் தண்ணீரைக் கொண்டு தங்களுடைய உயிரை மீட்டுக் கொடுத்த அப்துல் முத்தலிபே இந்த சிறப்பு வாய்ந்த தண்ணீருக்கு உடமையாளராக இருந்து கொள்ளட்டும் என்று அனைவரும் முடிவெடுத்தார்கள். இந்த நிகழ்ச்சிக்குப் பின், ஸம்ஸம் நீரூற்றுக்கு முழு உடமையாளராக அப்துல் முத்தலிப்பும் அவர்களும், அவர்களது குடும்பத்தார்களும் ஆனார்கள், சிறப்புத் தகைமையைப் பெற்றுக் கொண்டார்கள்.

இங்கே நாம் குறிப்பாக அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், அப்துல் முத்தலிப் அவர்களுக்கு இந்த ஸம்ஸம் நீரூற்று முழு உடமையானதாக ஆகி விட்டபடியால், அதன் நீரை மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கான உரிமையை அவர் மறுக்க முடியும் என்பதல்ல. மாறாக, அதற்குப் பொறுப்பாளராக இருப்பதன் மூலம், ஹஜ் மற்றும் உம்ரா நிமித்தம் வருகின்ற யாத்ரீகர்களுக்கு ஸம்ஸம் தண்ணீர் எளிதாகக் கிடைப்பதற்குண்டான வழிகளை ஏற்பாடு செய்து கொடுக்கும் பொறுப்பும், அந்த சிறப்பு வாய்ந்த கௌரவமான பதவியையும் பெற்றுக் கொண்டதோடு, இவரைத் தவிர்த்து வேறு யாருக்கும் இத்தகைய கௌரவம் கிடையாது என்பதே இதன் அர்த்தமாகும் என்பதையும் புரிந்து கொள்வது நல்லது.

## இஸ்லாத்திற்கு முன்பும் புனிதமானது

அப்துல் முத்தலிப் அவர்களது முயற்சியால், ஸம்ஸம் நீரூற்று தனது பொழிவை மீண்டும் பெற்றுக் கொண்டதோடல்லாமல், புனிதத்தன்மைக்கு அது உரித்தானது என்றும் அவர்கள் நம்பிக்கை கொண்டார்கள். முக்கியமான பிரச்னைகளின் பொழுது, ஸம்ஸம் நீரைப் பருகி விட்டு அந்த நிகழ்ச்சியை ஆரம்பிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள்.

அல் ஹாரித் இப்னு கலீஃபா அஸ்ஸாதீ என்பவர் அறிவிக்கின்றார், குறைஷிகள் தங்களது எதிரிகளைச் சந்திக்கச் செல்லுமுன், அதற்கான தயாரிப்புகளுக்கு முன்பாக ஸம்ஸம் நீரைப் பருகும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். தன்னுடைய பிரச்னையின் தீவிரத்தை வெளிக்காட்ட விரும்பும் ஒருவர், ஸம்ஸம் கிணற்றின் அருகில் இருக்கும் பானைகளைச் சேகரிப்பதன் மூலம் அதனை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள்.

ஸம்ஸம் தண்ணீரானது மிகவும் புனிதமானது என்று மக்கத்துக் குறைஷிகள் நம்பிக்கை வைத்திருந்தார்கள். மேலும், பிரச்னைகளின் பொழுது இந்தத் தண்ணீர் தங்களுக்கு அருட்கொடையை வழங்கும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்ததோடு, பல நேரங்களில் அவர்களது நம்பிக்கைக்கு மாற்றமாகவும் நடந்திருக்கின்றது.

## கிணற்றின் அமைவிடம்

கஃபாவிற்கு சில அடி தூரத்திலும், மகாமே இப்றாஹீமிற்குப் பின்புறமாகவும் ஸம்ஸம் கிணறு அமைந்துள்ளது. இப்பொழுது அந்த இடம் மக்களுக்குத் தெளிவாக விளங்கும் அடிப்படையில், வட்ட வடிவ அமைப்பிலான மார்பிள் கட்டுமானத்துடன் கட்டப்பட்டுள்ளது. இன்னும் கஃபாவை வலம் (தவாஃப்) வரக் கூடியவர்கள் மற்றும் உள்ள வசதிகளுக்கு இடையூறின்றி, தரை மட்டத்திலிருந்தும், கட்டடத்தின் கீழ் மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து வித தூய்மையற்ற தன்மைகளிலிருந்தும் பாதுகாக்கும் பொருட்டு ஸம்ஸம் கிணறு மிகவும் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.

ஸம்ஸம் கிணறு கண்டுபிடிக்கப்பட்டதன் பின்பு, இதே பெயரினைக் கொண்ட கிணறுகள் மதீனாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பெயர்க் காரணம்

இதன் பெயருக்குரிய என்ன காரணத்தைக் கூறினாலும் அனைத்தும் அதன் மீதுள்ள மதிப்பையும், மரியாதையையும் தான் நமக்கு அதிகரிக்கச் செய்கின்றது. மிகவும் தனிப்பெரும் வரலாற்றுச் சிறப்புடைய இதன் சரித்திரத்தை ஆராய்ந்தோமென்றால், அது பல பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுவதாக இருக்கின்றது. அதாவது, "அருட்கொடை மிக்கது", "அருட்கொடையுடையது" என்ற பொருளின் அடிப்படையில் அழைக்கப்படுவதாக இருக்கின்றது. இன்னொரு பெயராக, "புஷ்ரா" - இறைநம்பிக்கையாளர்களுக்கு நன்மாராயம் வழங்கக் கூடியது என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்றது.

இன்னும் சில பெயர்களும், அதாவது புனிதப்படுத்தப்பட்டது என்றும் அழைக்கப்படுகின்றது. இன்னும் வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள், பூமியின் அடிப்பாகத்திலிருந்து அதனை வெளிப்படுத்தியமைக்காக, இதனை 'ஹம்ஸத் ஜிப்ரீல்' என்றும், 'வாதா..த் ஜிப்ரீல்' என்றும் அழைக்கப்படுகின்றது.

ஸம்ஸம் நீரூற்றானது அதனுடைய தன்மைக்குத் தகுந்தவாறு பலவாறாக அழைக்கப்படுகின்றது. இன்னும் இதில் சில பெயர்களை இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நபிமொழிகளிலிருந்தும் நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. அதனை அதனது குணாதிசயங்களை வைத்து இவ்வாறு அழைத்துள்ளனர். அதாவது, 'பிணி தீர்க்கக் கூடியது' என்றும், 'பசித்தோறுக்கு உணவாகக் கூடியது' என்றும் அதனைப் பெயரிட்டு, இறைத்தூதுர் (ஸல்) அவர்கள் நமக்கு அதனை அறிமுகம் செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும், 'நிறைவானது', 'பயன்தரக்கூடியது', 'பரிசுத்தமானது' மற்றும் 'இனிமையானது' என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

## சுவனத் தொடர்பு

ஒருமுறை ஒரு மனிதர் இந்த ஸம்ஸம் கிணற்றில் விழுந்து விட்டார். அவரது உடலை வெளியே மீட்டெடுப்பதற்காக, கிணற்றிலிருந்து அதிகமான தண்ணீர் வெளியேற்றப்பட்டது. பின் அந்த உடலை வெளியே எடுத்த பின்பு, கஃபாவை நோக்கி ஓடி வருகின்ற ஸம்ஸம் கிணற்றின் தண்ணீரை வெளியேற்றிய அந்த மனிதரைப் பார்த்து இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். "இந்த கிணற்றின் பிறப்பானது எங்கிருந்து வருகின்றதென்றால், சுவனத்திலிருந்து (வருகின்றது)".

அப்துல்லா இப்னு அம்ர் (ரலி) என்ற நபித்தோழரும், இதே கருத்தைக் கூறியுள்ளார்கள். எனவே, ஸம்ஸம் தண்ணீருக்கு இன்னொரு பெருமை என்னவென்றால், அது இந்த உலகத்தில் உள்ள நீரூற்றுடன், சுவனத்தின் நீரூற்றும் கலந்து வெளியாகின்றது என்பதேயாகும்.

இது இந்த முஸ்லிம் உம்மத்திற்கு இறைவன் அளித்த மிகப் பெரும் அருட்கொடையாகும்.

## தெளிவான அத்தாட்சிகள்

ஸம்ஸம் கிணறு வீற்றிருக்கின்ற மக்காவில் உள்ள 'ஹரம்' பள்ளிவாசல் தான் உலகிலேயே, ஓரிறைவனை வணங்குவதற்காகக் கட்டப்பட்ட முதல் புனிதமிக்க பள்ளிவாசலாகும். இந்த புனிதத்துடன், இன்னும் பல அடையாளங்களையும் இந்த இடத்தின் மீது அருட்கொடையாக இறைவன் வழங்கியிருக்கின்றான்.

இறைவன் தன்னுடைய திருமறையிலே கூறுகின்றான் :

(இறை வணக்கத்திற்கென) மனிதர்களுக்காக வைக்கப் பெற்ற முதல் வீடு நிச்சயமாக பக்காவில் (மக்காவில்) உள்ளதுதான். அது பரக்கத்து (பாக்கியம்) மிக்கதாகவும், உலக மக்கள் யாவருக்கும் நேர்வழியாகவும் இருக்கிறது. அதில் தெளிவான அத்தாட்சிகள் உள்ளன. (உதாரணமாக, இப்ராஹீம் நின்ற இடம்) மகாமு இப்ராஹீம் இருக்கின்றது. மேலும் எவர் அதில் நுழைகிறாரோ அவர் (அச்சம் தீர்ந்தவராகப்) பாதுகாப்பும் பெறுகிறார். (3:96-97)

ஸம்ஸம் கிணறும் கூட தெளிவானதொரு அத்தாட்சிகளில் உள்ளதாகும். சரித்திரப்படி பார்த்தோமானால் முதலாவதாக, இப்றாஹிம் (அலை) அவர்கள் தனது மனைவியையும், குழந்தையையும் எந்த வாழ்க்கை வசதிகளும் இல்லாத பாலைவனப் பிரதேசத்தில் இறைவனது கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு விட்டு விட்டுச் செல்லும் பொழுது, இறைவனிடம் இவ்வாறு கோரிக்கை விடுகின்றார் :

"எங்கள் இறைவனே! நிச்சயமாக நான் என் சந்ததியாரிலிருந்தும், சங்கையான உன் வீட்டின் (கஃபாவின்) அருகே, விவசாயமில்லாத (இப்)பள்ளத்தாக்கில், எங்கள் இறைவனே! - தொழுகையை அவர்கள் நிலை நிறுத்தாட்டுவதற்காகக் குடியேற்றியிருக்கின்றேன். எனவே மக்களில் ஒரு தொகையினரின் இதயங்களை அவர்கள்பால் சாய்ந்திடச்ந்தர்ர் செய்வாயாக! இன்னும் அவர்கள் நன்றி செலுத்தும் பொருட்டு கனிவர்க்கங்களிலிருந்து அவர்களுக்கு நீ ஆகாரமும் அளிப்பாயாக!". (14:37)

ஸம்ஸம் ஆனது இறைவன் வழங்கியிருக்கின்ற கனி வர்க்கங்களில் எல்லாம் முதன்மையானது.

## வற்றாத நீரூற்று

ஸம்ஸம் தண்ணீரின் இன்னுமொரு குணாதிசயம் என்னவென்றால், அது எக்காலத்திற்கும் வற்றாத நீரூற்றாகும். இது இறைவன் மக்காவிற்கும், இன்னும் அதற்கு ஹஜ் மற்றும் உம்ராவை நிறைவேற்றும் நிமித்தமாக வரக் கூடிய முஸ்லிம்களுக்கு வழங்கியிருக்கக் கூடிய அருட்கொடையாகும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

அல்லாஹ் தனது பூரண கிருபையை (அன்னை ஹாஜரா - இஸ்மாயீல் (அலை) அவர்களின் தாயார்) அவர்கள் மீது அருள்வானாக..! (அவர்கள்) இந்த வற்றாத நீரூற்றிலிருந்து (ஸம்ஸம்) தண்ணீரை வழிந்தோடும்படிச் செய்(வதற்குக் காரணமாக அமைந்)திருக்கின்றார்கள். (அஹ்மத்)

அத்தஹாக் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் :

நியாயத் தீர்ப்பு நாளைக்குச் சற்று முன்பதாக, ஸம்ஸம் நீரூற்றைத் தவிர்த்து அனைத்து நீரூற்றுக்களும் (கடல் நீரைத் தவிர்த்து) வற்றி விடும்.

ஆயிரக்கணக்கான வருடங்களாக மில்லியன் மில்லியன் கணக்கான மக்கள் இந்த ஸம்ஸம் நீரைப் பருகிச் சென்ற வண்ணம் இருக்கின்றார்கள். இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பள்ளி

அமைந்திருக்கின்ற மதீனாவிற்கும் இங்கிருந்து ஸம்ஸம் தண்ணீர் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அத்துடன், ஹஜ் மற்றும் உம்ரா வரக் கூடிய மக்கள் தங்களது இல்லங்களுக்குத் திரும்பும் பொழுது, இவ்வளவு தண்ணீரை அள்ளிக் கொண்டு செல்கின்றோமே, வற்றி விட்டால் என்ன செய்வது என்ற மன அழுத்தம் அல்லது கவலை எதுமில்லாமல், மில்லியன் கணக்கான லிட்டர்களைச் சுமந்த வண்ணம் தங்களுடன் ஸம்ஸம் தண்ணீரை எடுத்துச் செல்லக் கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இதனுடைய சிறப்பே என்னவென்றால், எந்தளவு அதனைப் பருகின்றோமோ அந்தளவுக்கு அது ஊறிக் கொண்டே இருக்கும்.

## இறைநம்பிக்கையாளர்களின் தோழன்

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக, இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள் :

“நமக்கும் (இறைநம்பிக்கையாளர்களுக்கும்) மற்றும் வேஷதாரிகளான (முனா∴பிக்குகளுக்கும்) உள்ள வித்தியாசம் என்னவென்றால், ஸம்ஸம் தண்ணீரை அவர்கள் அதிகம் பருக மாட்டார்கள். (இப்னு மாஜா)

ஒரு முஸ்லிம் ஸம்ஸம் தண்ணீரை விரும்புவதோடு, தனக்குப் போதுமென்ற அளவுக்கு அதனைப் பருகக் கூடியவனாக இருப்பான், அதே நேரத்தில் முனா∴பிக்கான வேஷதாரிகள் அவ்வாறு பருக மாட்டார்கள். இறைவனது கட்டளைகளை சிரமேற்கொண்டு அதனை நிறைவேற்றுவதில் நம்பிக்கையாளர்கள் ஆர்வம் காட்டுவதிலும், இன்னும் அதனை மீறுவதன் மூலம் ஏற்படுகின்ற தண்டனைக்குப் பயந்தும், இன்னும் இறைவனது அருட்கொடையை உதாசீனம் செய்து விட்டு, அருட்கொடை அல்லாத ஒன்றிருக்கு முக்கியத்துவம் கொடுப்பதையும் அவர்கள் விரும்புபவர்களாக இருக்க மாட்டார்கள்.

## வேதியியல் பகுப்பாய்வு (Chemical Analysis of Zam Zam Water)

ஸம்ஸம் தண்ணீரை வேதியியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்திய பொழுது, அது சுத்தமானது, நிறமற்றது அல்லது வாடையற்றதாகவும், இன்னும் தனிச்சுவை உடையதாகவும் மற்றும் இதில் 7.5 புள்ளியளவு ஹைட்ரஜன் கலந்திருப்பதால் இது சிறிதளவு காரத்தன்மை (Alkaline) உடையதாகவும் இருக்கின்றது என்று டாக்டர். அஹ்மத் அப்துல் காதிர் என்ற இன்ஜீனியர் குறிப்பிடுகின்றார்.

அமெரிக்க பரிசோதனைக் கூடத்தில் நடத்தப்பட்டதொரு ஆய்வில், இதில் 30 விதமான பொருட்கள் இதில் கலந்திருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றில் சில 0.01 விகிதம் என்றளவில் கூட கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, உலக சுகாதர அமைப்பு (WHO) ஏற்படுத்தியிருக்கின்ற வேதியியல் மாதிரி அட்டவணையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இது மனித உபயோகத்திற்கும் இன்னும் உடல் நலத்திற்கும் பயன்தரக் கூடியதாக இருக்கின்றது என்று கண்டறியப்பட்டுள்ளது. இன்னும் இதில் உப்புச் சத்து (சோடியம் குளோரைடு) அதிகம் உள்ளது, இவ்வளவு தான் சோடியம் குளோரைடு கலந்திருக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு நிர்ணயிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

| Minerals | Percentage |
|---|---|
| Calcium | 198 |
| Magnesium | 43.7 |

| | |
|---|---|
| Chloride | 335 |
| Sulfur | 370 |
| Iron | 0.15 |
| Manganese | 0.15 |
| Copper | 0.12 |
| Analysis of a study conducted in the laboratory of the Department of Water and Waste Water Treatment, the Western Province, Saudi Arabia. (1400H) | |

மேலும் ஸம்ஸம் தண்ணீரானது, அகச் சிவப்புக் கதிர்களின் பரவலுக்கு உட்படுத்தப்படுவதன் மூலம், அதன் சுவை மாறாத அளவிலும், காற்று மண்ணடலத்தில் உள்ள பாக்டீரியாக்கள் மற்றும் கண்ணுக்குத் தெரியாத நுண் கிருமிகள் வளர்வது தடுக்கப்படுகின்றது.

இன்னும் பல வேதியியல் ஆய்வுகளின் அடிப்படையில், வறண்ட கால நிலைகளில் ஏற்படுகின்ற அதிகம் ஆவியாகும் (evoporation) தன்மை காரணமாக, ஸம்ஸம் தண்ணீரின் உப்புத் (Saline) தன்மை யானது அல்லாஹ்வின் சக்தியின் காரணமாக அதிகரிக்கின்றது, இது அந்தக் காலநிலையில் மனிதனது உடலுக்கு மிகவும் பயன் தரத்தக்கதாக இருக்கின்றது.

இறுதியாக, இது இறைவன் தன்னுடைய திருத்தூதர் (ஸல்) அவர்களுக்கு வழங்கிய அருட்கொடை மற்றும் அற்புதத் தன்மையை நிரூபிக்கக் கூடியதாகவும், இன்னும் அவரை இவ்வாறு வர்ணித்திருப்பது போல,

அவர் தம் இச்சைப்படி (எதையும்) பேசுவதில்லை. அது அவருக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி வேறில்லை. (53:3-4)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"ஸம்ஸம் தண்ணீரானது ஒருவருக்குச் சிறந்த ஆகாரமாகவும் இன்னும் நோய் தீர்க்கக் கூடிய நிவாரணியாகவும் இருக்கின்றது" மற்றும் "ஸம் ஸம் தண்ணீரானது, அதனை எதனை நினைத்துப் பருகின்றாரோ அந்த நோக்கத்திற்காகப் பருகட்டும், (அது அதனை நிறைவேற்றக் கூடிய (மருந்)தாகவும் இருக்கின்றது.

எனவே, ஸம்ஸம் தண்ணீரைப் பருகுவதும், அதனைக் கொண்டு சுத்தம் செய்து கொள்வதும் இன்னும் நோயுற்ற மனிதன் மீது அதனைத் தெளிப்பதும் சுன்னாவாகும்.

ஸம்ஸம் நீரை அருந்துவதன் பயன்கள்

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

முழு வேகத்துடன் ஓட வேண்டும் மற்றும் மல்யுத்தம் என்று வரும்பொழுது மிகவும் பலசாலியாக இருக்க வேண்டும் என்று விரும்பக் கூடிய மக்காவாசிகள், ஸம்ஸம் தண்ணீரை அருந்தி விட்டு அந்தப் போட்டிகளில் கலந்து கொள்வார்கள், ஆனால் எப்பொழுது அவர்கள் ஸம்ஸம் தண்ணீரை அருந்தாமல்

நிறுத்தி விடுகின்றார்களோ, அப்பொழுது அவர்கள் பாதங்கள் நோய் வாய்ப்பட்டது போல உணரக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக மேலும் அவர்கள் கூறும் பொழுது, 'ஒருவர் எதனை நினைத்து ஸம்ஸம் தண்ணீரை அருந்துகின்றாரோ, அது அவருக்கு அதனை நிறைவேற்றக் கூடியதாக இருக்கின்றது. ஒருவர் தனது நோய்க்காக நிவாரணத்தைத் தேடினால், அல்லாஹ் அவரது நோயைத் தீர்த்து வைக்கின்றான். இன்னும் தனது பசிப்பிணி தீர வேண்டும் என்று விரும்பி அதனை நிறைவாக அருந்தினால், அது அவரது பசிப்பிணியைத் தீர்த்து வயிறு நிரம்பிய உணர்வைத் தரும். இன்னும் தனது தாகம் அடங்க வேண்டும் வேண்டும் என்று நினைத்து அதனை அருந்தினால், அவரது தாகத்தை அல்லாஹ் தீர்த்து வைப்பான். (அஹ்மது மற்றும் இப்னு மாஜா)

ஸம்ஸம் தண்ணீரை அருந்துவது மிகவும் பயன்தரத்தக்கது என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது. எனவே, சகோதர, சகோதரிகளே..! உங்களில் ஒருவர் ஸம்ஸம் தண்ணீரை அருந்துகிறீர்கள் என்றால், இந்த உலகிலேயே மிகவும் பரிசுத்தமான சிறப்பு வாய்ந்த தண்ணீரை அருந்துகின்றோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

'உலகிலே உள்ள தண்ணீரிலேயே மிகவும் சிறந்தது ஸம்ஸம் தண்ணீராகும்".

இப்னு ஹாதிம் அவர்கள் கூறினார்கள், இப்னு வஹ்ப் அவர்கள் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்தார்கள். அப்பொழுது நாங்கள் அவரைச் சந்திக்கச் சென்ற பொழுது, அவரிடம் ஸம்ஸம் தண்ணீர் இருந்தது. இதனை நீங்கள் அருந்தினீர்கள் என்றால் உங்கள் நோய்க்கான நிவாரணி (உப்பை) பெற்றுக் கொள்வீர்கள் என்றோம். அதற்கு அவர், நான் நோயிலிருந்து மீளும் வரைக்கும் இதனை அருந்துவேன் என்று கூறினார். என்னுடைய உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக, இந்த ஸம்ஸம் தண்ணீர் தீர்ந்தும் விடாது அல்லது குறைந்தும் போய் விடாது. அல்லாஹ்வின் அருள்மறை வேதத்தில்.., 'இது நல்லோர்கள் அருந்தக் கூடியதாக இருக்கின்றது'. அல்லாஹ்வின் அருள்மறை வேதத்தில்.., 'விலைமதிப்பற்ற வாசனைத்திரவியம்'. அல்லாஹ்வின் அருள்மறை வேதத்தில்.. 'சிறந்த உணவாகவும், இன்னும் சிறந்த நிவாரணியாகும்'. என்னுடைய உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக, 'எவரொருவர் அதனை முழுமையாக அருந்துகின்றாரோ, அதன் பயனைப் பெற்றுக் கொள்வார். (ஸயீத் இப்னு மன்சூர் மற்றும் அல் அர்ஸாகீ).

மேலே உள்ள அனைத்தும் நபிமொழிகளில் உள்ள உண்மைத்துவத்தை மெய்ப்பிப்பதாக இருக்கின்றது. இன்னும் அதனை எதற்காக அருந்துகின்றாரோ, அதனை நிறைவேற்றக் கூடியதாகவும் இருக்கின்றது. மேலும், பல இஸ்லாமிய அறிஞர்கள் இதனை அருந்தியதன் மூலம், ஸம்ஸம் தண்ணீரிலிருந்து அற்புதமான பலனைப் பெற்றிருக்கின்றார்கள். அபூ ஹனீஃபா அவர்கள் தான் ஒரு கல்வியாளராக வேண்டும் என எண்ணி ஸம்ஸம் தண்ணீரை அருந்தியதன் காரணமாக, அவர் வாழ்ந்த காலத்தில் மிகச் சிறப்பான அறிஞராகத் திகழ்ந்தார்.

அல்-பக்ரி என்பவர் கூறினார், ஸம்ஸம் தண்ணீரை அருந்தினேன், அதுபற்றிக் கூறப்பட்டுள்ள உண்மைகளை நான் கண்டு கொண்டேன், அதனை அருந்திய பொழுது, அதனுடைய முழுமையான பலனை நான் சந்தேகமறப் பெற்றுக் கொண்டேன்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், தான் ஒரு கல்யறிவுள்ளவனாக ஆக வேண்டும் என்று நினைத்து அவர்கள் அருந்தியதன் பலனை தான் பெற்றுக் கொண்டதாகவும் அவர்கள் கூறியுள்ளதோடு, இன்னும்

இதனை அருந்திவிட்ட வில் எய்த பொழுது, பத்து வில்களை இலக்கு நோக்கிச் செலுத்திய பொழுது, அவற்றில் ஒன்பது வில்கள் சரியான இலக்கை அடைந்ததாகக் குறிப்பிடுகின்றார்கள்.

இன்னும், அல் அஜ்மீ என்பவருடைய மனாஸிக் மற்றும் அல் குறைஷி என்பவருடைய அல் பஹ்ர் அல் அமீக் என்ற நூலில், அல் அஜ்மீ அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள், தனது பாவ மன்னிப்பை நாடி ஒருவர் ஸம்ஸம் தண்ணீரை அருந்தும் பொழுது, யா அல்லாஹ்..! இந்த ஸம்ஸம் தண்ணீரை எதனை நாடி ஒருவர் அருந்துகின்றாரோ அதனை நிறைவேற்றி வைக்கக் கூடியது என்று எங்களது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதாக நான் அறிந்ததன் காரணமாக.., யா அல்லாஹ் ..! நான் இந்த ஸம்ஸம் தண்ணீரை எனது பாவ மன்னிப்பை நாடி அருந்துகின்றேன், எனது பாவங்களை மன்னிப்பாயாக..! என்று நினைத்துக் கொள்ள வேண்டும்.

இன்னும், தனது நோய்களுக்கு நிவாரணத்தை நாடி ஒருவர் இதனை அருந்தும் பொழுது, யா அல்லாஹ்..! எனது நோய்க்கான நிவாரணியாக இதனை நான் அருந்துகின்றேன், யா அல்லாஹ்..! எனது நோயைக்கான நிவாரணத்தை வழங்குவாயாக..! என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

## மக்காவிற்கு வெளியே ஸம்ஸம் தண்ணீரை எடுத்துச் செல்வதன் சட்டம்

அல் இமாம் அல் ஃபாரிஸி அவர்கள் குறிப்பிடுவதாவது, ஸம்ஸம் தண்ணீரை மக்காவிற்கு வெளியே எடுத்துச் செல்வது அனுமதிக்கப்பட்டது என்று நான்கு இமாம்களும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். மேலும் இமாம் மாலிக்கி மற்றும் ஷாஃபிஈ ஆகிய இருவரும் இதனைப் பரிந்துரைத்திருக்கின்றார்கள்.

ஆயிஷா (ரலி) குறிப்பிடுவதாவது, இறைத்தூதர் (ஸல்) அவர்களும் மற்றும் நானும் இவ்வாறு (அதாவது ஸம்ஸம் தண்ணீரை மக்காவை விட்டும் வெளியே) கொண்டு செல்லக் கூடியவர்களாக இருந்தோம். (திர்மிதீ).

அபு ஹஸன் அவர்கள் கூறினார்கள்,

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சுஹைல் பின் அம்ர் (ரலி) அவர்களுக்கு அனுப்பிய செய்தியில், என்னுடைய இந்தச் செய்தியை நீங்கள் இரவில் கிடைக்கப் பெற்றால் பகல் வரை காத்திருக்க வேண்டாம், இன்னும் பகலில் கிடைக்கப் பெற்றால், இரவு வரை காத்திருக்க வேண்டாம், உடனே ஸம்ஸம் தண்ணீரை அனுப்பி வைக்கவும்' என்று எழுதியிருந்தார்கள். பின்பு, சுஹைல் (ரலி) அவர்களது மனைவியும், அவரது பாட்டனாரும், அயூப் பின் அப்துல்லா (ரலி) மற்றும் அவர்களது வேலைக்காரப் பெண்மணியும் சேர்ந்து ஸம்ஸம் தண்ணீரை இரவில் எடுத்துச் சென்றார்கள்... (அபூ மூஸா அல் மதீனீ மற்றும் அல் அஸ்ரகீ)

அத்தா என்பவர் குறிப்பிடுவதாவது, கஅப் அல் அஹ்பார் கள், ஷாம் தேசத்திற்கு (ஸம்ஸம் தண்ணீரை) எடுத்துச் செல்லக் கூடியவர்களாக இருந்தார்கள். (ஷாம் என்பது சிரியா, லெபனான், ஜோர்டான், பாலஸ்தீனம் உள்ளிட்ட தேசங்களாகும்).

ஆயிஷா (ரலி) அவர்கள், நோய்வாய்ப்பட்டவர்களுக்காக ஸம்ஸம் தண்ணீரை எடுத்துச் செல்லக் கூடியவர்களாக இருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களும், ஸம்ஸம் தண்ணீரை தோல் பைகளில் எடுத்துச் செல்பவர்களாகவும், நோயாளிகளின் மீது தெளிப்பதற்கும் இன்னும் அவர்களுக்குக் குடிப்பதற்குக் கொடுப்பதற்காகவும் பயன்படுத்துபவர்களாக இருந்தார்கள். (அல் ஃபக்கிஹி)

ஹபீப் என்பவர், அத்தா என்பவரிடம், 'நான் ஸம்ஸம் தண்ணீரை எடுத்துக் கொண்டு செல்லலாமா? என்றார். அதற்கு அவர், 'ஆம்' என்றார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், தோல் பைகளில் நிரப்பி

எடுத்துச் செல்பவர்களாகவும், மற்றும் அதில் ஒற்றி எடுக்கப்பட்ட பேரீச்சம் பழங்களை அல் ஹஸன் (ரலி) மற்றும் அல் ஹு ஸைன் (ரலி) அவர்களுக்குக் கொடுக்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்' என்று அத்தா அவர்கள் பதில் கூறினார்கள்.